நான்காவது தேர்ச்சி : பல்வேறு பக்தி முயற்சிகளின் வழியாக செபவாழ்வை மென்மேலும் வளர்த்துக் கொள்வர்

19

## 4.2. அருள்பொழியும் செபமாலை

இன்று பிறந்த நாட்கள், திருமண வைபவங்கள், யூபிலி விழாக்கள், ஆலயத் திருவிழா போன்ற கொண்டாட்டங்களில் ஒருவர் ஒருவரை நாம் வாழ்த்துகிறோம்.

**கபிரியேல் வானதூதர் மரியாவை வாழ்த்தினார்.**



ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி,''அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்'' என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து,''மரியா, அஞ்சவேண்டாம்'': கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்: அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார்: உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது' என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், 'இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!' என்றார். வானதூதர் அவரிடம், ''தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை'' என்றார். பின்னர் மரியா,'' நான் ஆண்டவரின் அடிமை: உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

லூக். 1:26-38

''அப்போது அவர் உரத்த குரலில், ''பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே!...''

லூாக் 1:42

- மனுவுருவெடுத்த இறை மகனும் எமது மீட்பருமான இயேசுவின் தாயாகுமாறு கன்னி மரியாவை இறைவன் தெரிந்தெடுத்தார்.
- ''நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என தமது விருப்பைத் தெரிவித்து இயேசுவின் பிறப்பு முதல் சிலுவை மரணம் வரை அவரது மீட்புப் பணியில் உடனிருந்தார்.
- அருள் நிறைந்த மரியே .... என்ற செபத்தில் நாமும் அன்னை மரியாவை திருவிவிலிய வார்த்தைகளில் வாழ்த்தி அவரது பரிந்துரையை வேண்டுகிறோம்.

- செபமாலையை செபிக்கும்போது ''அருள் நிறைந்த மரியே......'' எனும் செபத்தை மீண்டும் மீண்டும் செபிக்கிறோம்.
- இறை, மனித சுபாவத்தை ஒன்றிணைத்த இயேசுவின் தாய் எனும் பேறு பெற்றதனால் கிறிஸ்துவின் அடுத்தபடியாக அன்னை மரியாவை மகிமைப்படுத்துகிறோம்.
- அன்னை மரியாவை மகிமைப்படுத்துவதால் அவரை நாம் ஆராதிப்பதில்லை; ஆராதனை இறைவன் ஒருவருக்கே உரியதாகும்.
- முழு மனுக்குலத்தினதும் மகிமையையும் அன்பையும் பெறும் அன்னை மரியா இறைவன் முன்னிலையில் எமக்காகப் பரிந்துபேசுகிறார்.

**பதிலளிக்கவும்**

1. மீட்புத் திட்டத்தில் மரியாவை இறைவன் தெரிந்தெடுத்தார் என்ற செய்தியை வெளிப்படுத்திய வானதூதர் மரியாவின் உறவினரைப்பற்றி என்ன கூறினார்?
2. இறைவனின் செய்தியை ஏற்று கீழ்ப்படிவதாக மரியா எவ்வாறு வெளிப்படுத்தினார்?





## மரியாவும் செபமாலையும்

மரியா செபமாலை ஏந்தியவாறு பல தடவைகள் காட்சியளித்துள்ளார். விசேஷமாக தாம் காட்சியளித்த மூன்று சந்தர்ப்பங்களில் செபமாலையைச் செபிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

1. 13ம் நூற்றாண்டில் ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த புனித தோமினிக் டி கூஸ்மன் என்ற குருவுக்கு காட்சியளித்து செபமாலைப் பக்தியை பரப்பச் சொன்னார்.
2. பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் கி.பி. 1858ல் பெர்னதெத்து எனும் சிறுமிக்குக் காட்சியளித்து பாவிகளின் மனமாற்றத்துக்காகச் செபமாலை செபிக்கச் சொன்னார்.

3. போர்த்துக்கல் நாட்டிலுள்ள பாத்திமா நகரில் லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ என்ற மூன்று சிறுவருக்குக் காட்சியளித்து செபமாலையைச் செபிக்குமாறு பணித்தார்.

பாவிகளின் மனமாற்றத்திற்காக செபம், தபம் செய்ய வேண்டுமெனவும், குறிப்பாக செபமாலை செபிக்க வேண்டுமெனவும் மரியா தமது காட்சிகளில் கேட்டுக் கொண்டார்.

- செபமாலை கத்தோலிக்கர் மத்தியில் பாரம்பரியச் செபமாகும்.
- செபமாலை செபித்தல் மிகவும் எளிமையான செபமாகும்.
- செபமாலையைத் தனியாகவும், குடும்பமாகவும், குழுவாகவும் செபிக்கிறோம்.
- செபமாலையை செபிக்கும் போது அன்னை மரியாவின் வேண்டுகோளை நிறைவேற்றுகின்றோம்.
- செபமாலை செபிக்கும் போது அன்னை மரியின் பரிந்துரையால் இறை அருளைப் பெறுகிறோம்.

**செயற்பாடு :-**

1. மரியன்னையின் காட்சிகள் எமக்கு விடுக்கும் அழைப்பு என்ன?
2. செபமாலையின் 20 தேவ இரகசியங்களையும் எழுதுக?
3. எமது நாட்டிற்காக மரியன்னையின் பரிந்துரையை வேண்டி சிறிய செபம் எழுதவும்.
4. மரியன்னையின் பிரார்த்தனையில் மரியன்னைக்கு வழங்கப்படும் பெயர்களைத் தேடி எழுதவும்.
5. வகுப்பறையில் செபமாலை செபிக்க ஏற்பாடுகள் செய்து செபிக்கவும்.

## செபமாலையும் இறைவனின் மீட்புத் திட்டமும்

இறைவன் தமது மீட்புத் திட்டத்தை தமது திருமகன் வழியாக நிறைவேற்ற அன்னை மரியாவைத் தெரிந்தெடுத்தார். அன்னை மரியாவும் இவ் அழைப்பை ஏற்றுக்கொண்டார். இவ்வாறு இறைமகன் இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டு நிறைவேறிய இறைவனின் மீட்புத் திட்டத்தில் அன்னை மரியாவும் பங்காளியாகினார். இறைமகன் இயேசுவிலும் அன்னை மரியிலும் நிறைவேறிய மீட்பின் செயல்களைத் தியானித்து செபமாலை செபிக்கிறோம்.

2002ஆம் ஆண்டில் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் ''றொசாறியும் விர்ஜீனிஸ் மரியா'' எனும் அப்போஸ்தலிக்க மடல் வழியாக ஒளியின் மறை நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்தார்.

செபமாலையில் 20 தேவ இரகசியங்கள் உள்ளன. அவை:

மகிழ்ச்சி தேவ இரகசியங்கள்(மறை நிகழ்சிகள்)
ஒளியின் தேவ இரகசியங்கள்
துக்க தேவ இரகசியங்கள்
மகிமை தேவ இரகசியங்கள்

**1. மகிழ்ச்சி மறைநிகழ்ச்சிகள்**

மீட்பை எதிர்பார்த்திருந்த மக்கள் கிறிஸ்துவின் வருகையினால் மகிழ்ச்சியடைந்தார்கள். இந்நிகழ்வுகளை மகிழ்ச்சி மறைநிகழ்ச்சிகள் என அழைக்கிறோம்

i தாழ்ச்சி
ii பிறரன்பு
iii ஏழ்மை
iv இறைபற்று
v மகிழ்ச்சி

**2. ஒளியின் மறைநிகழ்ச்சிகள்**

இயேசுவின் பகிரங்க வாழ்வையும் அவரது பணியையும் உள்ளடக்கிய நிகழ்வுகளை ஒளியின் மறைநிகழ்ச்சிகள் என அழைக்கிறோம்.

i மூவொரு இறைவனின் வெளிப்பாடு
ii மரியன்னையின் பரிந்துரை
iii மனந்திரும்பி இறைவனை நாடுதல்
iv இறைமகிமையில் ஆர்வம்
v ஆராதனை

**3. துக்க மறைநிகழ்ச்சிகள்.**

கிறிஸ்துவின் பாடுகள், மரணம் வழியாக இறைவனின் அன்பு முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட நிகழ்வுகளை துக்க மறை நிகழ்ச்சிகள் என அழைக்கிறோம்.

i பாவங்களுக்காக மனம்வருந்துதல்.
ii தூய்மை
iii பலம்
iv பொறுமை
v ஏற்றுக்கொள்ளல்

**4. மகிமை மறைநிகழ்ச்சிகள்.**

கிறிஸ்து மரணத்தை வெற்றிகொண்டு உயிர்த்தார். அவர் இருளிலிருந்து உலகை ஒளிக்கு அழைத்துச் சென்றார். இறைதந்தையை மகிமைப்படுத்தினார்.

i விசுவாசம்
ii எதிர்பார்ப்பு
iii இறையன்பு
iv மரியன்னையின் மகிமை
v மரியன்னை அனைத்துலக அரசி

செபமாலை செபிக்கும் போது இயேசுவின் மனித அவதாரம், குழந்தைப்பருவம், பணிவாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு, மகிமை, மீட்பின் பலன் ஆகியவற்றை அன்னை மரியுடன் இணைந்து தியானிக்கின்றோம்.
செபமாலையை தியானித்து, பக்தியோடு பொருளுணர்ந்து செபிக்கும் போது மீட்பின் அருளை, அன்னை மரியின் பரிந்துரையினால் பெற்றுக்கொள்கிறோம்.

## மரியன்னையின் கடன் திருநாட்கள்

ஜனவரி 01 - இறைவனின் அன்னை
ஆகஸ்ட்டு 15 - மரியன்னையின் விண்ணேற்பு
டிசம்பர் 08 - மரியன்னையின் அமல உற்பவம்.

## செபமாலை அன்னை விழா

கி.பி. 1571ல் திருத்தந்தை 5ம் பத்திநாதர் செபமாலை அன்னையின் விழாவை ஐப்பசி மாதம் 7ம் திகதியன்று கொண்டாட வேண்டுமென பிரகடனப்படுத்தினார். 1571ம் ஆண்டில் லெபான்தோவில் நடைபெற்ற கடற்படைப்போரில் செபமாலையைச் செபித்து கிறிஸ்தவர்கள் வெற்றி பெற்றதன் நினைவாக இவ்விழாவை திருத்தந்தை பிரகடனப்படுத்தினார்.

## செபமாலையைப் பற்றி திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கூறுகிறார்:

- என் இளமைப்பருவம் முதற்கொண்டு இச் செபம் என் ஆன்மீக வாழ்வில் முக்கியமானதோர் இடத்தைப் பிடித்துள்ளது....
- என்னுடைய இன்பத்திலும், துன்ப நேரத்திலும் செபமாலை எனது துணைவனாக இருந்துள்ளது...
- அதில் ஏராளமான கவலைகளை ஒப்படைத்திருக்கிறேன். அதில் நான் எப்போதும் ஆறுதல் பெற்றுள்ளேன். செபமாலை தான் நான் பெரிதும் விரும்பும் செபம்.

## செயற்பாடு :-

1. செபமாலையில் தியானிக்கப்படும் தேவ மறை நிகழ்ச்சிகளை மனனம் செய்து கூறுக.
2. செபமாலை செபிக்கக்கூடிய சந்தர்ப்பங்களைப் பட்டியல் படுத்துக.

## சிந்தனைக்கு:-

- மரியன்னையின் பெயரில் பணியாற்றும் பக்திச் சபையில் இணைந்து பணி செய்வோம்.
- மாதத்தின் முதற் சனிக்கிழமைகளில் ஆலயம் சென்று செபமாலை செபிப்போம்.
- தினமும் குடும்பச் செபமாலையை ஊக்குவித்து பங்கு பெறுவோம்.
- செபமாலை அன்னையின் திருவிழாத் திருப்பலியில் பக்தியுடன் பங்கு பெறுவோம்.
- செபமாலைப் பக்தியை வளர்ப்போம்.
- செபமாலையை எப்பொழுதும் எம்முடன் வைத்திருப்போம்.

### வாழ்க்கைக்கு

தினமும் செபமாலை செபிப்பதை என் வாழ்வில் வழக்கப்படுத்திக்கொள்வேன்.